www.agaram.lk

# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை- 2019
# முயற்சியாண்மைக் கல்வி

63 T 1,11

**தரம் 10**

மூன்று மணித்தியாலயம்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**கவனிக்குக:-**
1) **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
2) **இலக்கம் 01 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிக**

## பகுதி 1

01. எண்ணங்களை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடல், சரியான தீர்மானமெடுத்தல் என்பவற்றினூடாக பொருளாதார சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் தனிநபரைக் குறிப்பது,
(1) ஊழியர் (2) முகாமையாளர் (3) முயற்சியாளர் (4) தலைவர்

02. பாலன் என்பவர் புதிய வடிவமைப்பு மற்றும் அழகிய வர்ணப் பூச்சுகளுடன் கூடிய பிரம்பிலான தளபாடங்களை உதவியாளர் ஒருவரின் உதவியுடன் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றார். மேற்கூறிய விடயத்தில் இனங்காணக்கூடிய உற்பத்திக் காரணிகளை காட்டும் விடையினைத் தெரிக.
(1) மூலதனம், முயற்சி
(2) நிலம், உழைப்பு
(3) முயற்சி, உழைப்பு
(4) நிலம், மூலதனம்

03. உற்பத்திக்குப் பயன்படுத்தும் கட்டடங்கள், இயந்திர உபகரணங்கள், கருவிகள் என்பவற்றைக் குறிப்பது,
(1) மூலதனம்
(2) உழைப்பு
(3) நிலம்
(4) முயற்சி

04. முயற்சியாண்மைப் பண்புகளை மட்டும் உள்ளடக்கும் விடையினைத் தெரிவு செய்க.
(1) ஆக்கத்திறன், சுதந்திரத்தன்மை, வினைத்திறன்
(2) உற்பத்தித்திறன், புத்துருவாக்கம், எதிர்கால தூரநோக்கு
(3) வினைத்திறன், விளைதிறன், உற்பத்தித்திறன்
(4) புத்துருவாக்கம், சுதந்திரத்தன்மை, நேர்சிந்தனை

05. முயற்சியாளன் தனது நோக்கத்தை அடைவதற்காக தனிப்பட்ட தேவைகளை ஒதுக்கி வைத்து செயற்படும் பண்பைக் குறிப்பது,
(1) நெகிழும் தன்மை
(2) சுய ஊக்குவிப்பு
(3) பொதுவான தன்மை
(4) அர்ப்பணிப்பு

06. நடைமுறையில் காணப்படும் பிரச்சினைக்குத் தீர்வாக முயற்சியாளனின் எண்ணத்தினை சந்தைப்படுத்தக் கூடிய பொருள் அல்லது சேவையொன்றாக மாற்றுவது,
(1) ஆக்கத்திறன்
(2) புத்துருவாக்கம்
(3) எண்ணக்கருத்திறன்
(4) மானிடத் திறன்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

07. பின்வருவனவற்றுள் ஆக்கத்திறனுக்கு தடையாக அமையும் காரணியாகக் கருதப்படக்கூடியது
(1) பல்லினத் தன்மையை உருவாக்கிக் கொள்ளல்
(2) ஆக்கபூர்வமான நடத்தைகளை பின்பற்றுதல்
(3) உடனடிப் பெறுபேற்றினை எதிர்பார்த்தல்
(4) தோல்விகளை சகித்துக் கொள்ளல்

08. புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளில் தற்போதுள்ள எண்ணக்கரு அல்லது காரணிகளுடன் புதிய கலவையொன்றைப் பயன்படுத்தி புதிய உற்பத்தியினை உருவாக்குவதைக் குறிப்பது,
(1) புதிய கண்டுபிடிப்பு
(2) பின்பற்றுதல்
(3) நீடிப்பு
(4) கூட்டு

09. தேவைகள், விருப்பங்கள் தொடர்பான பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A. ஆரம்பத்திலேயே உருவாகுதல்
B. பல்வேறுபட்டது
C. முயற்சியாளர் அல்லது வணிகரால் உருவாக்கக் கூடியது
D. வரையறுக்கப்பட்டது
E. சகலருக்கும் பொதுவானது

மேற்குறிப்பிட்டவற்றுள் தேவைகளின் பண்புகளை மட்டும் கொண்ட விடைத்தொகையினைத் தெரிவு செய்க.
(1) B. C (2) A. D. E (3) B, C, D (4) A, B, C

10. பின்வருவனவற்றுள் சேவை ஒன்றின் பண்பாகக் கருதப்படக் கூடியது,
(1) களஞ்சியப்படுத்த முடியாது
(2) பௌதீக நிலைப்பாடு காணப்படல்
(3) வழங்குநரிடமிருந்து பிரிக்க முடியும்
(4) ஒரே தன்மை கொண்டவை

**11.** வணிகம் ஒன்றின் பண்பாகக் **கருதப்பட முடியாதது,**
(1) வளப் பரிமாற்றம் செய்தல்
(2) இலாபத்தை நோக்காகக் கொண்டே செயற்படல்
(3) பொருளாதார நடவடிக்கையொன்றாக அமைதல்
(4) நோக்கமொன்று காணப்படல்

agaram.lk

12. முயற்சியாளர் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) புதிய முதலீடுகளினூடாக வணிகத்தை விரிவுபடுத்துபவர்
(2) போட்டியினை சவாலொன்றாக எடுப்பவர்
(3) பாரம்பரிய முறைகளை பின்பற்றுபவர்
(4) வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துபவர்

13. பெருகி வரும் பாத்தீனியச் செடி பெருகும் இடங்களை அழிப்பதற்கான துரித செயற்திட்டமொன்று அறிமுகம் செய்வதானது,
(1) சமூக முயற்சியாண்மையாகும்
(2) பூகோள முயற்சியாண்மையாகும்
(3) உள்ளக முயற்சியாண்மை
(4) வணிக முயற்சியாண்மையாகும்

14. முயற்சியாண்மை மூலம் முயற்சியாளர் ஒருவருக்குக் கிடைக்கும் தனிப்பட்ட அனுகூலமாக அமைவது,
(1) புதிய பொருட்கள் மற்றும் சேவைகளைச் சந்தையில் அறிமுகப்படுத்தல்
(2) சுதந்திரமும், மிக உயர்ந்த ஆத்ம திருப்தி கிடைக்கின்றமை
(3) தன்னாதிக்கமுள்ள, சுதந்திரமான பொருளாதாரச் சமூகம் உருவாகுதல்
(4) பிரதேச அபிவிருத்தி ஏற்படல்



agaram.lk

15. மலரவன் குறைந்த ஊழியர்களுடனும், குறைந்த மூலதனத்துடனும் ஓர் சொந்த வியாபாரமொன்றை நடாத்திச் செல்கின்றார். இவ்வணிகமானது,
(1) பேரளவு வணிகமாகும்
(2) நடுத்தரளவு வணிகமாகும்
(3) சிற்றளவு வணிகமாகும்
(4) சிறிய நடுத்தரளவு வணிகமாகும்

16. முயற்சியாளரின் வகிபாகங்களின் செயற்பாடுகளில் தலைவர் என்ற வகிபாகச் செயற்பாட்டினைக் குறிப்பது,
(1) தன்னிடமுள்ள பணத்தை வணிகத்தில் ஈடுபடுத்தல்
(2) உயர்தரமுடைய பொருட்களை உற்பத்தி செய்து வழங்குதல்
(3) திட்டமிட்ட பெறுபேறுகளை உண்மையான பெறுபேறுகளுடன் ஒப்பிடல்
(4) வணிகத்தில் ஊழியர்களுடன் செயற்படும்போது அவர்களை வழிப்படுத்தி உரிய வழிகாட்டல்களை வழங்குதல்

17. தும்பு தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளரான தேவன் என்பவர் புதிய தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி புதிய வடிவமைப்புகளுடன் கூடிய உற்பத்திகளை மேற்கொள்வதுடன் புதிய சந்தை வாய்ப்புக்களைத் தேடும் முயற்சியாளராவார். தேவனின் முயற்சியாண்மைத் திறனாகக் கருதக் கூடியது,
(1) எண்ணக்கரு ரீதியான திறன்
(2) மானிடத்திறன்
(3) தொழில்நுட்பத் திறன்
(4) தொடர்பாடல் திறன்

18. முயற்சியாளர் ஒருவரால் உருவாக்கக்கூடிய தொழில்நுட்பத்திறனுக்கு உதாரணமாக அமைவது,
(1) ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
(2) புதிய சந்தைவாய்ப்புக்களை தேடிக்கொள்ளல்
(3) சிறந்த ஊழியர்களை சேர்த்துக்கொள்ள இருக்கின்ற திறன்
(4) உரிய நேரத்திற்கு வேலைகளில் ஈடுபடல்

19. வணிகச் செயற்பாடுகளின்போது நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் சக்திகள் அனைத்தையும் குறிப்பது,
(1) வணிக எண்ணம்
(2) வணிகச் சூழல்
(3) வணிக வாய்ப்பு
(4) வணிக அச்சுறுத்தல்

20. பின்வருவனவற்றுள் அகச்சூழல் காரணியாகக் கருதப்பட முடியாதது,
(1) மக்கள் சூழல்
(2) உரிமையாளர்
(3) முகாமையாளர்
(4) ஊழியர்

21. பெற்ற கடனுக்கு அதிக வட்டி செலுத்த வேண்டியுள்ளமை வணிகத்திற்கு ஒரு,
(1) வாய்ப்பாகும்
(2) அச்சுறுத்தலாகும்
(3) பலமாகும்
(4) பலவீனமாகும்

22. புறச்சூழல் காரணிகளில் வணிகத்திற்கு மிகவும் நெருக்கமாகச் செயற்படுகின்ற சக்திகளை உள்ளடக்கிய சூழலைக் குறிப்பது,
(1) பொருளாதாரச் சூழல்
(2) மக்கட் சூழல்
(3) இயற்கைச் சூழல்
(4) அண்மிய சூழல்

23. பூகோளமய சூழல் காரணமாக வெளிநாட்டு உற்பத்திகள் உள்நாட்டுச் சந்தைகளில் அதிகமாகக் காணப்படுவது உள்நாட்டு வணிகர்களுக்கு ................................. ஆகக் காணப்படும்.
(1) அச்சுறுத்தல்
(2) வாய்ப்பு
(3) பலம்
(4) பலவீனம்

24. முயற்சியாளர் ஒருவர் தனது பலவீனங்களை அறிந்து கொள்வதற்காக பகுப்பாய்வு செய்யும் சூழலாக அமைவது,
(1) அண்மிய சூழல்
(2) அகச் சூழல்
(3) பொருளாதாரச் சூழல்
(4) புறச் சூழல்

25. ..................................... சூழலை அடிப்படையாகக் கொண்டே பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான சந்தை வடிவமைக்கப்படுகின்றது.
(1) இயற்கைச் சூழல்
(2) விஞ்ஞான தொழில்நுட்பச் சூழல்
(3) மக்கட் சூழல்
(4) பொருளாதாரச் சூழல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

# முயற்சியாண்மைக் கல்வி

## பகுதி II

## விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

### வினா 01

01. பின்வரும் கூற்றுக்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மைப் பண்புகளைக் குறிப்பிடுக
(அ) மதுரன் தனது தொலைபேசி விற்பனை செய்யும் வணிகத்தை நடாத்தும் போது தொழில் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வார்.
(ஆ) விமலா தனது ஆடைத் தொழிற்சாலையில் தனிப்பட்ட தனது தேவைகளை ஒதுக்கி வைத்து விட்டு நிறுவன வெற்றிக்காக செயற்படும் திறனைக் கொண்டவர்.
02. ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் இரண்டு தருக
03. நட்ட இடருக்கும், இலாபத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக
04. வணிகருக்கும், முயற்சியாளருக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக
05. முயற்சியாண்மை மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக

### வினா 02

பளை பிரதேசத்தில் வசிக்கும் கரன் என்பவர் குறிப்பிட்ட பிரதேசத்தில் இலகுவாகக் கிடைக்கக்கூடிய தென்னந்தும்புகளை பயன்படுத்தி தும்பு உற்பத்திகளை பத்து ஊழியர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்கின்றார். இவர் மெத்தை உற்பத்திகளை பாரியளவில் உற்பத்தி செய்யும் தனியார் கம்பனிக்கு தும்புகளை வழங்கி வருகின்றார்.

மேற்குறித்த சம்பவத்திற்கமைய கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக
01. கரனின் வணிகம் பொருளாதார விருத்திக்கு வழங்கும் பங்களிப்புக்கள் இரண்டு தருக
02. மேற்குறித்த வணிகத்தில் காணப்படும் பண்புகள் இரண்டு தருக
03. கரன் மேலும் தனது வணிகத்தை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டு தருக
04. தும்புத் தொழிற்சாலையில் காணப்படும் இயந்திரங்களை பழுதுபார்த்தல், இயக்குதல், புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு கரனுக்கு இருக்க வேண்டிய திறனைக் குறிப்பிடுக
05. கரன் முன் மாதிரியாகச் செயற்படும் திறனைக் கொண்டிருக்க வேண்டுமெனின் தனது நிறுவனத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கு உதாரணம் தருக.

### வினா 03

01. புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக
02. முயற்சியாளரின் ஆக்கபூர்வத்தன்மை, புத்துருவாக்கம், என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்பினைக் குறிப்பிடுக
03. வணிகர்களுக்கும், முயற்சியாளர்களுக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமைகள் இரண்டினைத் தருக
04. சமூக முயற்சியாளருக்கு இரண்டு உதாரணம் தருக
05. சிற்றளவு வணிகங்களுக்கும், முயற்சியாண்மைக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக

### வினா 04

01. வணிகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் முயற்சியாளர் ஒருவர் பெற்றுக் கொள்ளும் பயன்கள் இரண்டு தருக
02. வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுக
03. ஊழியர்கள் மத்தியில் ஏற்படும் பலவீனங்களை எவ்வாறு ஒரு நிறுவனத்தின் முகாமை குறைத்துக் கொள்ள முடியும்
04. பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு இரண்டு உதாரணம் தருக
05. பூகோளச் சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

## வினா 05

01. வணிகமொன்றின் புறச்சூழல் காரணிகளைக் குறிப்பிடுக
02. பின்வரும் சூழற்காரணிகளின் தாக்கங்கள் எவ்வாறான சூழற் காரணிகளுக்குரியது என்பதைக் குறிப்பிடுக
    i. சர்வதேச வணிக உடன்படிக்கைகள் மேற்கொள்ளல்
    ii. கடனுக்கான வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படல்
03. அலங்கார மீன்களைவ விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்திச் செல்லும் ஒரு முயற்சியாளர் முகங் கொடுக்க வேண்டியேற்படும் அச்சுறுத்தல் இரண்டினைக் குறிப்பிடுக
04. பின்வரும் கூற்றுக்களை நன்கு வாசித்து அவற்றில் பலம் பலவீனம் என்பவற்றைக் குறிப்பிடுக
    (அ) கால மாற்றத்திற்கேற்ப செயற்படாமை
    (ஆ) வணிகச் செயற்பாடுகளை தகுதியான ஒருவரிடம் ஒப்படைத்தல்
    (இ) தரமான உற்பத்திகளை நியாயமான விலைக்கு வழங்குதல்
    (ஈ) வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தாமை
05. மாட்டிறைச்சி உண்பதை இந்து, பௌத்த சமய மக்கள் தவிர்த்து வருகின்றனர். இதற்கு காரணமாக அமையும் சூழற் காரணியைக் குறிப்பிடுக

## வினா 06

01. அண்மிய சூழல் காரணிகளைக் குறிப்பிடுக
02. கீழ்வரும் கூற்றுக்களை நன்கு வாசித்து அவற்றுள் வாய்ப்பு.்.அச்சுறுத்தல் எவை என்பதைக் குறிப்பிடுக
    i. போட்டியாளர் தமது உபாய மார்க்கங்களை மாற்றுதல்
    ii. அரசு வரிவிகிதங்களை அதிகரித்தல்
    iii. சர்வதேச சந்தைகளில் நுழைவதற்கான சந்தர்ப்பம் அதிகரித்தல்
    iv. புதிய நகரங்கள் உருவாகுதல்
03. முயற்சியாண்மையாளர் உரிமையாளர் என்ற வகையில் தனது வணிகத்தினுள் நிறைவேற்றும் கருமங்கள் இரண்டினைக் குறிப்பிடுக
04. நிறுவனமொன்றின் முகாமையாளர் ஒருவர் பலமாக அமையும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக
05. அரசியல் மற்றும் சட்டச்சூழல் காரணிகளுக்கு இரண்டு உதாரணம் தருக

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk